Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வ௵ மீ ஆடி 12 ஆம் உ சனிக்கிழமை (28 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 05 ஓசை 160

## மோசடி வியாபாரிகள் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அகதி முகாம்களின் பெயரைக் கூறி மோசடியில் ஈடுபடும் வியாபாரிகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பெரிய கடைகளில், சில வியாபாரிகள் அகதி முகாம்களின் தேவைக்கு எனப்பொய் கூறி பொருட்களை மலிவு விலையில் வாங்கி அதிக விலைக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் ராணுவம்கடும்சண்டை!

## இன்று வரலாம்

(யாழ்ப்பாணம்)

உணவுக் கப்பல் இன்று யாழ். வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கொழும்பில் இருந்து உணவுப் பொருட்களை ஏற்றி வரும் கப்பல் நேற்று பருத்தித்துறை முகத்திற்கு வந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் முல்லைத்தீவில் உணவுப் பொருட்களை இறக்வதில் ஏற்பட்ட தாமதம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகாமத்திலும் மோதல் ஐந்து சிப்பாய்கள் பலி!

(நமது நிருபர்கள்)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புனானைப்பகுதியிலும் மட்டக்களப்பு நகரை அண்டிய தன்னாமுனையிலும் சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த மூன்று தினங்களாகக் கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இச் சண்டையில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 11 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா அரசு நேற்று ஒப்புக்கொண்டது.

இதே சமயம் திருக்கோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் பகுதியிலும் சிறிலங்கா இராணுவத்தின் அரண் ஒன்றை புலிகள் தாக்கி அழித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் ஊரணி-சந்தனாமடுப் பகுதியை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் அங்குள்ள மக்களைக் கேடயமாக வைத்துக்கொண்டு தொடர்ந்து முன்னேறிச் செல்ல முயற்சிப்பதாகத் தெரியவருகிறது.



சிறிலங்கா இராணுவத்தின் அட்டுழியங்களிலிருந்து தப்பி தமிழ் நாட்டில் இராமேஸ்வரம் போய்ச்சேரும் அகதிகளைப் படத்தில் காணலாம்

## தமிழகத்தில் 40,000 அகதிகள்

(சென்னை)

இலங்கையிலிருந்து நாற்பதாயிரம்தமிழ் அகதிகள் வரை தமிழகம் வந்துள்ளதாக தமிழக புனர்வாழ்வுத்துறை அமைச்சர் கூறியுள்ளார். தினமும் இரண்டாயிரம் பேர் வரை வந்துகொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

## இராணுவ காவல் அரண் மீது தாக்குதல்; இராணுவம் பலி

(திருக்கோணமலை)

தென்னமரவாடி 10-ம் கட்டையிலுள்ள இராணுவ முகாமின் காவல் அரணை, விடுதலைப்புலிகள் தாக்கிய பொழுது இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் காவல் அரணும் முற்றாகச் சேதமடைந்தது. இராணுவத்தினரின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களக் காடையர் தமிழ் வியாபாரிகளிடம் வழிப்பறி

(வவுனியா)

வவுனியாவில் தமிழ் வியாபாரிகளிடம் இருந்து சிங்களக் காடையர்கள் வழிப்பறிப்பு வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா எல்லைக் கிராமப் பகுதிகளிலேயே தமிழ் வியாபாரிகள் கொண்டுவரும் பொருட்கள் சிங்களக்காடையர்களினால் வழிமறித்து மிரட்டிப் பறிக்கப்படுகின்றன.

கடந்த 23ஆம் திகதி மாலை கோவில் குளத்திலிருந்து வவு (4 ஆம் பக்கம் பார்க்க)

### பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்போல

## மன்னாரில் அமையும் அகதி முகாமுக்கு ராணுவ பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்லும் தமிழர்களுக்கு மன்னாரில் சிறிலங்கா அரசு அமைக்கவிருக்கும் அகதி முகாம் இராணுவ சூனியப் பிரதேசமாக இருக்குமென்றும் அதேசமயம் இந்த முகாமின் பாதுகாப்பு மன்னார் இராணுவ முகாமினதும் தள்ளாடி இராணுவ முகாமினதும் பொறுப்பிலிருக்குமென்றும் சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் பிட்ரமன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் வாகனம் மீது ஹெலித் தாக்குதல்

(அச்சுவேலி)

பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிவந்த மினிபஸ்ஸை நீண்டதூரத்திற்கு ஹெலி தொடர்ந்து தாக்கியது. சாரதியின் திறமையினால் பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர் மினிபஸ் சேதமடைந்தது.

வடமராட்சியில் இருந்து பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, பரந்தன் மீது ஏவுகணைத் தாக்குதல்

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று செலுத்தப்பட்ட ஏவுகணைக்குண்டுகள் பரந்தன், கிளிநொச்சி நகர் பகுதிகளில் விழுந்து வெடித்ததால் கடைகளும் மற்றும் ஸ்தாபனங்களும் சேதமடைந்து எரிந்தவண்ணமிருக்கின்றன.

பரந்தன் நகரில் அவ்ரோ விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டதால் 4 கடைகள் முற்றாக சேதமடைந்தது.

## யாழ்நகர் மீது நேற்று மாலை குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரின் மத்தியபகுதியில் நேற்றுமாலை குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தப் (4 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்த நிறுத்தம்

## இராணுவத்தை விடுவிக்க புலிகள் கேட்டனராம்

(கொழும்பு)

\- ரஞ்சன்

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் கடந்த ஒன்றரை மாதங்களாக இடம்பெற்று வரும் சண்டைகளில், யாழ். கோட்டையில் சிக்கியிருக்கும் ராணுவத்தினரை விடுவிப்பதானால் யாழ். குடாநாட்டில் போர் நிறுத்தம் செய்ய (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கச்சேரியை இயக்க இராணுவ அதிகாரி நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா கச்சேரி அலுவலகம் அரசாங்க அதிபர் பொறுப்பை புதிதாய் ஏற்றுள்ள கேணல்ரட்னாயக்காவினால் மீண்டும் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி புதன் கிழமை வவுனியா கச்சேரியில் கிராமசேவையாளர்கள், மற்றும் அரச ஊழியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

அரச அதிபர் ரட்னாயக்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் காயமடைந்தோரை அகற்ற நிபந்தனை விதிக்கவில்லை

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

கோட்டையில் கடுமையாக காயமடைந்து இருந்த சிங்களப் படையினரை சிறிலங்கா அரசு அகற்ற விரும்பியபோது நாம் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் இணங்கினோம் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த 20 ஆம் திகதியன்று அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியோடு காயமடைந்த சிங்களப்படையினரை அரசு அகற்ற முயன்றபோது நாம் எவ்வித நிபந்தனையும் இன்றி தரைமார்க்கமாக அவர்களை எடுத்துச் செல்ல இணங்கினோம். அரசு தனது வரட்டு கௌரவத்தின் காரணமாக அவர்களை அகற்றவில்லை.

4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேண்டுகோள்

திருக்கோணமலை இல. 11 சிவன் வீதியைச் சேர்ந்த நடராஜா தேவமணி (மனோன்மணி) குடும்பத்தினரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் அறிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். பிள்ளைகள்: வதனி, ராணி, 42, புங்கங்குளம் றோட், கொழும்புத்துறை. (R/1294)

### தவறிவிட்டது

கோ.சரபாலகிருஷ்ணன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல 420221770V திருநெல்வேலி சந்தையிலிருந்து ஐந்து சந்திக்கிடையில் தவற விட்டு விட்டேன் இதனைக் கண்டெடுத்தவர்கள் 81, கலீபா அப்துல் கமீத் லேன் (கொல்லர் ஒழுங்கை) சோனக தெரு என்னும் முகவரிக்கு கொண்டுவந்து தரவும் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். (R55)

# கூட்டுறவுச்சங்க பொருள்கள் ஏற்ற இராணுவம் தடை

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உள்ள பொருட்கள், சமாஜத்தினால் ஏற்றிவரப்படுவது இராணுவத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பமான இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளை அடுத்து நகரப்பகுதியில் உள்ள அத்தனை கூட்டுறவுச் சங்கக் கிளைகளும் செயலிழந்து சாணப்படுகின்றன.

ஆனாலும், மேற்படி சங்கக் கிளைகளில் இலட்சக் கணக்கான பெறுமதியுடைய உணவுப் பொருட்கள் தேங்கி உள்ளன. இவற்றை மீட்டு வந்து கிராமப்பகுதி சங்கக் கிளைகளுக்கு அனுப்புவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகள் மேற் கொண்ட நடவடிக்கை இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி புதன் கிழமை லொறிகள் சகிதம் வவுனியா பஜார்வீதி கூட்டுறவுச்சங்க மொத்த விற்பனை நிலையத்தில் உள்ள உணவுப் பொருட்கள் ஏற்றி வரச் சென்றபோது இராணுவம் லொறிகளை திருப்பி அனுப்பியதாம்.

இம் மொத்த விற்பனை நிலையத்தில் மா, சீனி, லக்ஸ்பிறே, சவர்க்காரம் போன்ற பொருட்கள் ஏராளமாகத் தேங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம், மேற்படி மொத்த விற்பனை நிலையத்தின் கதவு உடைக்கப்பட்டுள்ளதாகவும், இதனுள் இருந்த பாதுகாப்பு இரும்புப்பெட்டி உடைக்கப்பட்டு, அதனுள் இருந்த சுமார் நாற்பது ஆயிரம் ரூபா பணம் சூறையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஆசிரியர்கள் அவதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் தொடர்ந்து இரண்டுமாதகாலமாக சம்பளப்பணமோ, முற்பணமோ இன்றி மிகவும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றார்கள்.

இவர்களது கொடுப்பனவுகள் திருக்கோணமலை மாகாண சபையினூடாகவே வழங்கப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓமந்தையில் தொடர்ச்சியான ஹெலி தாக்குதல்; மக்கள் அச்சம்

(வவுனியா)

ஓமந்தை பகுதியில் தொடர்ந்து ஹெலி தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இத்தாக்குதல் காரணமாக அப்பகுதிகளில் மக்களின் நடமாட்டம் குறைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

கடந்த 22 ஆம் திகதி சுமார் ஒரு மணித்தியாலம்வரை இப்பகுதியில் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலின் போது, தேவாலயத்தின் ஓடுகளும், வீதியில்நின்ற வான் ஒன்றும் சேதமடைந்தன.

ஓமந்தைப் பகுதியில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஹெலி, மற்றும் பொம்மர் தாக்குதல்களினால் வைத்திய சாலைக் கட்டடமும், பாடசாலைக் கட்டடமும், சனசமூக நிலையமும் பாதிக்கப்பட்டன என்பது தெரிந்ததே. (தி)

## தொடர்ந்து தாக்குதல்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி இராணுவ முகாம்களிலிருந்து இரவுப் பொழுதுகளில் தொடர்ந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கண்மூடித்தனமானஇத்தாக்குதலுக்கு அஞ்சி நகரத்தை அண்டிய கிராமப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்புத் தேடி தூர இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்,

சுமார் ஐந்து மைல் தூரத்திற்கு ஏவப்படும் ஷெல்கள், வீடுகளிலும், பொது இடங்களிலும் வீழ்ந்து வெடிக்கின்றன. (தி)

## பாம்புக் கடியால் பலர் பலி

(வவுனியா)

போதிய வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தினால் வவுனியா கிராமப் பகுதிகளில் பாம்பு கடியினால் பலர் இறந்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் வேலன்குளத்தில் வே. புஸ்பராஜா (வயது 39) என்பவருக்கு படுக்கையில் பாம்பு கடித்தது. இவர் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது இறந்தார்.

நெளுக்குளம் பகுதியிலும் ஒருவர் பாம்புக் கடியினால் பலியானார். (தி)

## 7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21-11-1965 மறைவு 28-06-1983

### இராசையா கணேசலிங்கம்

எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன்
ஏழாண்டு பூர்த்தியாகின்றது
தங்களின் நினைவு எங்களை விட்டு அகலாது
தங்கள் ஆத்மா சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் ஏங்கித் தவிக்கும்

அன்புப் பெற்றோர், பேர்த்தி, அத்தான்மார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், மருமக்கள், உறவினர்கள்.

சந்தம்புளியடி
காரைநகர். (B . 1272)

அன்று -
பாரதப் போரில்
பாண்டவர்களைப் போன்று
இன்று தர்மத்திற்காக
வீரப் புலிகள்
போராடுகின்றனர்!

அன்று -
பாரதப் போரில்
கௌரவர்களைப் போன்று
இன்று -
அதர்மத்திற்காக
பாசிச வெறியர்கள்
போராடுகின்றனர்!

விஜிகோ மரக்காலை

105, சட்டநாதர் வீதி, நல்லூர்.

(B.1293)

சிந்தனைக்கு

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்.

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 28-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## பழைய பாதையில்...

யார் யாரிடம் எந்தச் சமயங்களில் உதவி கேட்கக் கூடாதென்பதற்கும் யாரிடம் உதவி பெற வேண்டும் என்பதற்கும் யாருடன் நட்புறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கும் பஞ்சதந்திரக் கதைகளில் பல நிகழ்ச்சிகள் உண்டு.

தந்தை செல்வா தலைமையில் வளர்ந்த இலங்கைத் தமிழரசுக்கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாகி தமிழ் மக்களின் மதிப்பையும் செல்வாக்கையும் பெற்று வளர்ந்திருந்தது.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி ''கூடாநட்புச் சேர்ந்ததன் விளைவாகத் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு தனது நாமத்தையே இழந்தது!

இலங்கையில் அமைதி காக்கவென வந்த இந்திய இராணுவம் தனது பணியுடன் மட்டும் நின்றிருந்தால் மதிப்புடனும் கௌரவத்துடனும் தனது பணியை நல்ல முறையில் நிறைவேற்றித் திரும்பியிருக்கலாம்.

'றோ' என்ற இந்திய உளவுப் பிரிவின் ஆலோசனையினால் இலங்கையிலிருந்து தப்பிச் சென்று தமிழ் நாட்டில் தஞ்சமடைந்திருந்தவர்களுக்குப் பாதுகாப்பளித்து ஆயுதங்கள் வழங்கி அவர்களை வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆட்சி பீடத்திலமர்த்தி நட்புறவு கொண்டாடி அவர்களின் செயல்களுக்கெல்லாம் உடந்தையாகி தமிழ் மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டது இந்திய இராணுவம்!

கூடா நட்பின் மூலம் தந்நாமம் கெட்டது தமிழர் விடுதலைக் கூட்டணி.

கூடா நட்பின் மூலம் தனது கௌரவத்தையும் பலத்தையுமே இழந்தது உலகின் நாலாவது பெரிய இராணுவமான இந்திய இராணுவம்!

இப்பொழுது தமிழ் மக்களுக்கெதிராக நடைபெற்று வரும் யுத்தத்தில் தமிழ் மக்களைக் கைவிட்டுத் தப்பியோடிய குழுக்கள் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்க முன்வந்துள்ளன.

இந்தக் குழுக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் அக்குழுக்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்தக் குழுக்கள் இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் மாகாணசபையின் ஆட்சி பீடத்தில் இருந்த போது பிரேமதாசா அழைத்தும் சந்திக்கமறுத்து டில்லிக்குச் சென்று சந்தித்ததை அவர் மறந்திருக்க மாட்டார் என்றே நம்புகிறோம்.

இப்பொழுது இந்தக் குழுக்கள் பிரேமதாசாவுக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்க முன்வந்துள்ளன என்றால் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இந்தக் குழுக்கள் இந்தியப் படையுடன் வந்தபோதும் இங்கிருந்து திரும்பிச் செல்லும் சமயத்திலும் செய்தவைகளை பிரேமதாசா சிந்திக்க மறந்தாலும் தமிழ் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

இந்திய இராணுவம் இங்குவருவதற்குமுன்னர் கிழக்கு மாகாணத்தில் ஊர்காவற்படைசெய்த அட்டூழியங்களைத் தமிழ் மக்கள் மறக்கமுடியாது.

இப்பொழுது இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் மேலதிக ஊர்காவற்படை திரட்ட பிரேமதாசாவிடம் யோசனை கூறியிருக்கிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கோ தேசிய ஒற்றுமையை நிலை நாட்டவோ இவர்கள் யோசனை கூறுவதாகத் தெரியவில்லை.

பாவம். பிரேமதாசா இந்தக் கூடா நட்பின் வலையில் விழுந்து விடுவாரா, நழுவி விடுவாரா? நல்வழியில் செல்வாரா?

# தமிழீழத்தில் போர்க்கால விவசாய உற்பத்தி அபிவிருத்தித் திட்டம்

எமது பிரதான உணவுப் பயிரான நெல், நிகழ்ந்து கொண்டிருக்கும் போரினால் உற்பத்தியில் வீழ்ச்சியடைந்துள்ளது மட்டுமல்லாமல் சிறுபோக உற்பத்தியும் முற்றாகப் பாழ்பட்டுள்ளது. இந் நிலை நீடிக்குமானால் நாம் அனைவரும் பட்டினிச்சாவின் விளிம்பிற்கு தள்ளப்படுவது நிச்சயம். இப்பட்டினிச் சாவை வென்றெடுக்கவும் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையை உடைத்தெறிந்திடவும் தமிழீழ மக்கள் அனைவரும் உணவு உற்பத்தியில் முழுமையாக ஈடுபடுதல் வேண்டும்.

நீண்ட காலமாக எம் விவசாயிகள் பிற சந்தைகளை மையமாகக்கொண்டுபெருமளவில் முதலீடு செய்து பணப் பயிர்களை உற்பத்தி செய்து வருகிறார்கள். இந் நிலை உடனடியாக நிறுத்தப்பட்டு ஊட்டச் சத்து நிறைந்ததும் குறுகிய காலத்தில் பயன் தர வல்லதும் குறைந்த நீர் முகாமைத்துவத்தில் சிறந்த பலனைக் கொடுக்கக் கூடியதுமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்.

பணப் பயிர்களான புகையிலை, வெங்காயம் போன்றவற்றைபெருமளவில் உற்பத்தி செய்வதைக் கைவிட்டு மூன்று (03) மாத காலப் பயிர்களான பெளபி, பாசிப்பயறு, உழுந்து, சோயா அவரை போன்ற மலிந்த சிறந்த புரதச் சத்துக் கொண்ட பயிர்களைப் பயிரிட நாம் முன்வரவேண்டும். இது தவிர மாச்சத்து நிறைந்ததும் குறைந்த நீருடன் சிறந்து வளரும் கானல் பயிர்களான குரக்கன், சாமை, தினை, சோளம் போன்ற தானியப் பயிர்களும் மரவெள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைகளும் எம் மண்ணில் செழித்து வளர்வதோடு நல்ல விளைச்சலையும் கொடுக்கும் தன்மையன. இவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் நாம் அனைவரும் முனைதல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அவரை இனத் தானிய வகை மற்றும் கிழங்கு வகைப் பயிர்கள் அனைத்தும் குறுகிய காலத்தில் குறைந்த நீர்ப்பாசன வசதியுடன் நல்ல விளைச்சலைக் கொடுக்கக்கூடிய பயிர் வகைகள். இப்பயிர்களைப் பராமரிப்பது கடும் சிரமங்கள் ஏற்படா. காரணம் இவற்றிற்கு கிருமிநாசினியோ, பூச்சி கொல்லிகளோ அன்றேல் செயற்கை உர வகைகளோ பெருமளவில் தேவையில்லை. சுழற்சி முறையில் பயிரிடுவதன் மூலமும் இயற்கைப் பசளைகளை ஒன்றிணைப்பதன் மூலமும் விளைச்சலைக் கூட்டுவதோடு மண்ணின் வளத்தையும் எம்மால் சிறந்த முறையில் பாதுகாக்க முடியும்.

இன்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன் எமது தன்னிறைவு பெற்ற கிராமங்களை எண்ணிப் பாருங்கள். இத்தன்னிறைவில் பெரும் பங்கினை பனம்உணவுப் பொருள்களான கிழங்கு ஒடியல், ஒடியல்மா, பனாட்டு, பனங்கட்டி என்பன இட்டு நிரப்பின என்பது மிகையல்ல. எம்மிடமுள்ள அனைத்து பனையால் பெறப்படும் உணவு வளங்களும் எதிர் காலத்தில் முற்று முழுதாக பயன்படுத்தப் படல் வேண்டும்.

தமிழீழத்தில் விவசாயிகளை மட்டுமே உணவுப் பொருட்களுக்காக நம்பியிருக்கும் நிலையை விட்டு அனைத்து மக்களும் தங்களால் இயன்ற பங்களிப்பினை விவசாய உற்பத்திக்கு அளிக்க வேண்டும். இதனை நாம் எவ்வாறு அடையலாம்? வீடுகள் தோறும் தோட்டங்கள் அமைப்பதன் மூலம் நாம் சிறந்த பலனைக் குறுகிய காலத்தில் பெறமுடியும்.

### வீட்டுத் தோட்டம்

வீட்டுத்தோட்டம் அமைக்கும் போது இடவசதி, சூரிய ஒளி, நீர் ஆகிய மூன்று அம்சங்களையும் மனதிற் கொள்ளுதல் வேண்டும் வீட்டுத் தோட்டத்தில் பயிரிடும் பயிர்கள் மேலே கூறிய அம்சங்களுக்கு அமைய வேறுபடலாம். பொதுவாக அவை கீழ்காணும் அடிப்படையில் அமைதல் நன்று.

1. சக்தி கொடுக்கும்உணவு வகைகள், கிழங்கு, வற்றாளை போன்றவை.

2. புரத உணவு வகைகள் சோயா அவரை, பயறு பயத்தை, சிறகு அவரை.

3 மரக்கறி வகைகள். கீரை, பொன்னாங்காணி, புடோல், பாகல், கத்தரி, மிளகாய், முருங்கை.

4. பழவகைகள் பப்பாசி, வாழை.

5. இவற்றைவிட வீடுகள் தோறும்குறைந்தபட்சம் ஐந்து (5) கோழிகள், ஆடு அல்லது மாடு போன்ற விலங்குகளும் வளர்க்கப்பட வேண்டும்.

இது தவிரப்பப்பாசி, கொடித் தோடை, புடோல், பாகல், வெண்டி போன்ற பயிர்களை தனித்தனி சிறு பொலித்தீன் பைகளில் இட்டு மேற்கூறியது போல் வளர்த்து வீட்டுத் தோட்ட நடுகைக் குழிகளில் நேரடியாக நடலாம். □

# வட, தென் கொரியாக்கள் உடன்பாடுகளுக்குத் தயார்

(சோல்)

வட கொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வரும் செப்டெம்பர் மாதம் தென் கொரியாவில் இரு நாடுகளின் பிரதம மந்திரிகளும் சந்தித்து சில உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப் போகிறார்கள் என இரு நாடுகளின் அரசியல் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

அரை நூற்றாண்டு காலமாக இரு நாடுகளிடையேயும் நிலவி வந்த பதட்ட நிலை இச்சந்திப்பின் மூலம் குறைவடையும்என கருதப்படுகிறது

படைக்குறைப்பு, போரினைத் தவிர்த்தல் போன்ற விடயங்கள் இப் பேச்சு வார்த்தையின் போது முக்கிய விடயமாக எடுத்துக் கொள்ளப் படும் எனவும்கூறப்படுகிறது.

இச் சந்திப்பின் போது இராணுவத் தலைவர்களும் அரசியல்தலைவர்களும்கலந்து கொள்வார்கள்.

## ஜம்மு காஷ்மீரில் கலவரத்தால் 14 பேர் பலி

(டில்லி)

ஜம்மு காஷ்மீரில் கடந்த இரு நாட்களாக நடைபெற்று வரும் கலவரத்தில் இதுவரை 14பேர் உயிர் இழந்துள்ளனர்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இக்கலவரம் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் பாருக் அப்துல்லாவுடன் இந்திய மத்திய அரசு பேச்சு வார்த்தை நடத்துகிறது.

## தீ விபத்தில் 42 பேர் பலி

(பெய்ரூட்)

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் நாற்பத்தைந்து பேர் கொல்லப் பட்டார்கள்.

எண்ணெய் கப்பலொன்று வெடித்துசிதறியதைத்தொடர்ந்துஅருகிலிருந்தஹொட்டல் ஒன்றுக்கு தீபரவியதினாலேயே அங்கிருந்த இவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## பல இடங்களில் பொருட்கள் வாங்குவதற்குத் தடை

(வவுனியா)

வவுனியாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், பல கிராம சேவையாளர் பிரிவுகளில் அகதி நிவாரணப் பொருட்கள் பெறுவது விடுதலைப் புலிகளினால் தடை செய்யப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் சமயபுரம் கூட்டுறவுச் சங்கக் கிளையிலும், சாஸ்திரி கூழாங்குளம் கூட்டுறவுச் சங்கக்கிளையிலும் நிவாரண உணவுப் பொருட்கள் பெற்ற நான்கு குடும்பத்தவர்கள். விடுதலைப் புலிகளினால் கண்டுபிடிக்கப் பட்டனர்.

மேற்படி வேலைகளில் எவரையும் ஈடுபடவேண்டாம் என்றும், அத்தனை அகதிக் குடும்பங்களும் இதனால் பயனடைய முடியாமல் போய் விடும் என்றும் சிற்றூர் அவைகளும், கிராம சேவையாளர்களும் இதில் அதிக கவனமெடுக்க வேண்டும் என்றும் விடுதலைப்புலிகளினால் தெரிவிக்கப்பட்டது. (தி)

## சுகாதார அலுவலகம்

யாழ். மாநகரசுகாதாரப் பகுதியினர் கொழும்புத்துறை சென்ஜோசப் மகாவித்தியாலயத்தில் அலுவலகம் ஒன்றை திறந்து சுற்றாடலிலுள்ள அகதி முகாம்களுக்குச்சென்று கிருமிநாசினி தெளித்தல் போன்ற சுகாதாரவசதிகளை செய்து வருகின்றனர்.

(43)

## 25ஆவது சுதந்திர தினம்

மாலை தீவில் 25ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் நேற்று முன்தினம் மாலேயில் குதூகலமாக கொண்டாடப் பட்டது.

இக் கொண்டாட்டங்களில் 200 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றார்கள். 1965ஆம் ஆண்டு பிரித்தானியாவில் இருந்து சுதந்திரம் பெற்ற இந்நாடு இரண்டரை லட்சம் மக்களைக் கொண்டுள்ளது.

## இருபாலைச் சந்தியில் பதுங்கு குழி

(கோப்பாய்)

பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களால் இருபாலைச் சந்தியில் பொதுமக்கள்பதுங்கு குழி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது பதுங்கு குழி அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த ஆசிரிய தொண்டருக்கு பொதுமக்கள் தேநீர் மற்றும் உதவிகள் செய்து பதுங்குகுழி அமைக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர்.

அத்தோடு அகதிகளுக்கு உதவுவதென முடிவு செய்த பலாலி ஆசிரிய கலாசாலை மாணவ மன்றமானது ஜூலை மாத சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை அகதிகளுக்கு வழங்க தீர்மானித்துள்ளது.

## முதலுதவிப் பயிற்சி

(கோப்பாய்)

பலாலி ஆசிரியர் கலாசாலையில் முதலுதவி வகுப்புக்கள் நடைபெற்றது. இதில் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் கலந்து கொண்டு இப்பயிற்சியை மேற்கொண்டனர்.

இதனை கோப்பாய் பிரிவு சென். ஜோன் அம்புலன்ஸ் அத்தியட்சகர் திரு. சத்தியேஸ்வரன் அவர்கள் நடாத்தினார். விரிவுரையாளர் திரு. பிரான்சிஸ் சென். றோச் அவர்கள் நெறிப்படுத்தினார்.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற வகுப்பின் முடிவில் அகதி முகாம்களுக்குச் சென்று உதவுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# அப்பாவித் தமிழர் படுகொலைக்கு இந்திய ஜனாதிபதி ஆர். வி. கவலை

(புதுடில்லி)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கான யுத்தம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலையடைவதாக இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

மாநில ஆளுநர்கள் மாநாட்டைநேற்றுஆரம்பித்துவைத்து ஜனாதிபதி உரையாற்றும் போது இப்படிக் கூறினார்.

இந்த யுத்தம் காரணமாக தமிழ் அகதிகள் பெருமளவு இந்தியாவுக்கு வந்துகொண்டிருப்பதனால் இந்தியாவில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டு இந்தியா பெரிதும் பாதிக்கப்படுகிறது என்றும் இந்திய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர இந்திய அரசு இலங்கையரசுடன் தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறதுஎன்றும் அவர் கூறினார்.

இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் வாபஸ் பெறப்பட்ட பின்னர் அங்கே அமைதியை நிலைநாட்டவும், வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு போதிய அளவு அதிகாரம் வழங்கித் தமிழர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கச் சகல தரப்பும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று இந்தியா நம்பியிருந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## குஜ்ராலும் கவலை ஆனால் தலையீடும் இல்லையாம்

(புதுடில்லி)

இலங்கையில் தற்போது நடைபெறும் யுத்தம் இந்தியாவுக்குப் பெரும் கவலையளிக்கிறது என்று வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த விடயத்தில் இந்தியா தலையிட விரும்பவில்லை என்றும் அவர்மேலும் சொன்னார்.

## பதிவுத் தபால்கள் ஏற்கப்படுகின்றன

பதிவுத் தபால்களும் தற்போது இங்குள்ள தபாலகங்களில் ஏற்றுக் கொள்ளப்படும் என்று யாழ். மாவட்டத் தபால் சேவை அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார். இவ்விதம் ஏற்றுக் கொள்ளப்படும் கொழும்புக்கான பதிவுத் தபால் இந்தத் தடவை உணவுக் கப்பல் கொழும்புக்குத் திரும்பும்போது அதில் அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த கப்பல் கொழும்பிலிருந்து வரும்போது அங்குள்ள வெளிநாட்டுத் தபால்களும், பதிவுத் தபால்களும் இங்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளை தபால் மா அதிபருடன் செய்துள்ளதாகவும் திரு. சேதுகாவலர் கூறினார். ஏற்கனவே புறப்பட்ட சிகிரியா கப்பல் வரும்போது தபால் மா அதிபருடன் அத்தகைய ஏற்பாடு செய்யாததால் அவை கப்பலுக்கு வழங்கப்படவில்லை என்று அவர் கூறினார். (75)

## 26 பேர் கூட்டிச் செல்லப்படுவர்

வெளிநாட்டுப் பிரஜா உரிமை பெற்ற இலங்கையர்களும், வெளிநாட்டவர்களுமாக 26 பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட இருக்கிறார்கள்.

இவர்கள் தாம் பிரஜா உரிமை பெற்றுள்ள நாடுகளிலிருந்து விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்தபோது யுத்தம் ஆரம்பித்து போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்ததால் இங்கு அகப்பட்டுக் கொண்டார்கள். தற்போது உணவுப் பொருள்களுடன் இங்கு வர இருக்கும் ''சிகிரியா'' என்னும் கப்பலில் இவர்கள் கொழுபுக்கு அழைத்துச் செல்லப்பட இருக்கிறார்கள். (75)

## ஹமீத்திற்கு அஞ்சலி

(அச்சுவேலி)

காங்கேசன்துறையில் வியாழக்கிழமை வீரமரணமடைந்த வீரவேங்கை ஹமீத்தின் (சின்னத்துரை இராசலிங்கம், நாவற்காடு) வீர உடலுக்கு அவரது சொந்த இடமாகிய அச்சுவேலியில் ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

காங்கேசன்துறையிலிருந்து கொண்டுவரப்பட்ட வீரவேங்கை ஹமீத்தின் உடல் சொந்த இடமாகிய அச்சுவேலி நாவற்காட்டில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (16)

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு சம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஏழாம் திகதியில் சம்பள முற்பணமாக ஆயிரம்ரூபா கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும்.

இதற்குரிய விசேட படிவங்களை நிரப்பி கல்வித்திணைக்கள ஆசிரிய நிர்வாகப்பகுதியில் முதலாம் திகதி பன்னிரெண்டுமணிக்குமுன் சமர்ப்பிக்க வேண்டும் எனவும்,

படிவங்களைப் பூர்த்தி செய்ய வரும்போது அடையாள அட்டையையும், ஆசிரியர் தங்கியுள்ள பகுதியிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் சிபாரிசுக் கடிதத்தையும் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்திக் கட்டட ஊழியர்களுக்கான சம்பளம் வழங்குதல் தொடர்பாக யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## வவுனியா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சிங்கள, தமிழ் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பெருந்தொகையான முஸ்லிம் மக்கள் தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சிங்களப் பகுதிகளுக்குச் செல்வது பற்றி குறிப்பிட்ட ரட்னாயக்கா மேற்படி முஸ்லிம் மக்கள் இடம் பெயர்வதற்கான காரணம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றும் முஸ்லிம் மக்களில் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

சொந்த இருப்பிடங்களிலிருந்து வெளியேறும் முஸ்லிம் மக்களுக்கு வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் புதிதாய் அகதிமுகாம் ஒன்று அமைத்து கொடுக்க முயற்சி எடுத்திருப்பதாகவும் ரட்னாயக்கா தெரிவித்தார்.

நொச்சிமோட்டை பாடசாலையில் தற்காலிகமாக இயங்கி வந்த கச்சேரி மூடப்பட்டுள்ளது.

வவுனியா கச்சேரி இயங்கி வரும் காரணத்தினால் உணவு முத்திரைக்கான பொருட்களும், ஜனசக்தி அகதி நிவாரணப் பொருட்களும்மேற்படி கச்சேரியின் மூலமே விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கச்சேரி ஊழியர்கள் அனைவருக்கும் இராணுவ அதிகாரியினால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. (தி)

## இன்று

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக நேற்று வர இருந்த உணவுக் கப்பல் இன்று வரும் என கூறப்படுகிறது. (ம)

## க. பொ. த. பரீட்சை முடிவுகள் இன்று பாடசாலைகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட க. பொ. த. சாதாரணதர மாணவர்கள் எதிர்பார்த்திருந்த கல்லூரிமூலம் பரீட்சை எடுத்த க. பொ. த. சாதாரணதர பரீட்சை முடிவுகள் நேற்று யாழ் வந்தது.

நேற்றுமாலை 3-30 மணியளவில் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக்கு வந்து சேர்ந்த இப்பரீட்சை முடிவுகள் உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்ரலிங்கத்திடம் கையளிக்கப் பட்டுள்ளது.

இப் பரீட்சை முடிவுகளை ஆறு கோட்டக் கல்லூரி அதிகாரிகளும் தவறாது இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கும் பத்து மணிக்கும் இடையில் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு வந்து பெற்றுச்சென்று தத்தமது கோட்டத்திற்குரிய பாடசாலைகளுக்கு வழங்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சையாளர்களுக்கான பரீட்சை முடிவுகள் தபால்மூலம் இன்னும் ஒருசில தினங்களில் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (ம)

## மோசடி வியாபாரிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விற்றுவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி வீதிக்குவீதி முளைத்து வரும் மினிக்கடைகளின் உரிமையாளர்களே இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுவருகிறார்கள் சில இடங்களில் இவர்கள் கட்டாயப்படுத்தியும் பொருட்களை வாங்குகிறார்களாம்.

நேற்று ஒருவர் அகதிமுகாமிற்கு என்றுகூறி ஒரு கடையில் பல தடவை பொருட்களைத் தொகையாக வாங்கினாராம். சந்தேகமடைந்த கடை உரிமையாளர் அகதிமுகாமின் விபரங்களைக் கேட்டபோது நபர் நைசாக நழுவிவிட்டாராம். (மு)

## கோட்டையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இரு படையினர் உயிரிழந்துள்ளனர்.

யாழ். வைத்தியசாலையை திறந்தால் தான் நாங்கள் அவர்களை அகற்ற அனுமதிப்போம் எனக் கூறவில்லை அதேவேளை சிங்கள அரசு தமிழீழத்தில் உள்ள மிகப் பெரிய போதனா வைத்திய சாலையை குண்டுவீச்சுக்களால் மூடி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழத்தில் எந்த மாவட்டத்திலும் வைத்தியசாலைகள் இயங்கவில்லை. இதனால் தமிழீழ மக்கள் சரியான வைத்திய வசதி இல்லாமல் இறந்து வருகின்றனர்.

உதாரணமாக எங்கும் ''எக்ஸ் ரே'' (X Ray) இயந்திரம் கிடையாது. எங்கும் சத்திர சிகிச்சை செய்ய ஒக்சிசன் கிடையாது. இரத்தத்தை சேமித்து பாதுகாப்பதற்கும், சத்திர சிகிச்சை செய்யவும், மருந்துகளைப் பாதுகாப்பதற்கும் மின்சாரம் கிடை.யாது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெலிதாக்கு

(மானிப்பாய்)

மானிப்பாய் வைத்தியசாலைச் சுற்றாடலில் நேற்று மாலை ஹெலிக்கொப்ரர் கடும் தாக்குதலை நடாத்தியதுஇதனால்அப்பதிகு மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர்

இச்சசமயம் குண்டு வீச்சு விமானம் ஒன்று தாழ்வாக பறந்து நோட்டமிட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (லோ)

## மன்னாரில்

வீரக்கோன்தெரிவித்துள்ளார்

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழ் நாடு செல்லும் அகதிகளைத் திருப்பி அனுப்புமாறும் அவர்களுக்கு மன்னாரில் முகாம் அமைத்துப் பாதுகாப்பும் வழங்கப்படும் என்றும் சமீபத்தில் சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இலங்கையில் தமிழ் அகதிகளுக்கு அமைக்கப்படும் முகாம் ஐ. நா. வின் நேரடி மேற்பார்வையின் கீழ் நிர்வகிக்கப்பட வேண்டுமென்று தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

மன்னாரில் ஐ. நா. வினதும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினதும் மேற்பார்வையின்கீழ் அகதிமுகாம் அமைக்கப்படுமென சிறிலங்கா அரசு பின்னர் தெரிவித்தது. இப்போது மன்னாரில் அமைக்கப்படும் அகதிமுகாம் இராணுவ சூனியப் பிரதேசமாக இருக்குமென்றும் ஆனால் சிறிலங்கா இராணுவம் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்குமென்றும் பிராட்மன் வீரக்கோன் கூறுகிறார்.

## வீடுகள் சேதம்

(அச்சுவேலி)

வியாழக்கிழமை மாலை ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் அச்சுவேலி தெற்கில் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

## இராணுவத்தை

(1ஆம் பக்கத் தொடர்ங்சி)

வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

மன்னாரில் அகதி முகாம் ஒன்று அமைக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பை நாடிப் பேச்சு நடத்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இக் கோரிக்கை விடப்பட்டிருப்பதாக ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்தார்.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். ஆனால் இக் கோரிக்கையைத் தாம் நிராகரித்து விட்டதாகவும் ரஞ்சன் விஜேரட்னா தெரிவிததததாகவும் அகில இந்திய வானொலி அறிவித்தது.

## சிங்களக் . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னியா குளவெளிப் பகுதியால் பூந்தோட்டத்தை நோக்கி சைக்கிளில் கொண்டுவரப்பட்ட சீனிமூடை ஒன்று சிங்களக் காடையர் சிலரால் வழிமறிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டது.

மேற்படி சீனிமூடையுடன், சைக்கிளும், வேறு இரு தமிழரின் சைக்கிள்களும் பறிக்கப் பட்டன.

சிங்களக் காடையர்களின் இந் நடவடிக்கையால் தமிழ் வியாபாரிகள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

வழிப்பறிப்பில் ஈடுபடுபவர்கள் கத்தி, வாள்களுடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## பயணிகள் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸை புதன்கிழமை மாலை வல்லைமுனியப்பர் கோவிலடியிலிருந்து அச்சுவேலி நேர்றோட் மதவடி வரை ஹெலி நீண்டதூரத்திற்குதொடர்ந்து துரத்தியது.

மினிபஸ் சாரதி தனது திறமையினால் நேர்றோட்டில் உள்ள தென்னந்தோப்பில் மினிபஸ்ஸை மறைத்து பயணிகளை மயிரிழையில் உயிர் தப்பச் செய்தார். மினிபஸ் பலத்தசேதமடைந்தநிலையில் அச்சுவேலியுடன் தனது பயணத்தைநிறுத்திக்கொண்டது'

## யாழ். நகர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. குண்டுவீச்சுவிமானங்களும் அவ்ரோ விமானங்களும் ஒன்றுபோக ஒன்றாக தாக்குதல்களை நடத்தின.

இவ் விமானங்களின் மீது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை நேற்று நடத்தினர். இதனைத்தொடர்ந்து விமானங்கள் ஆகாயத்தின் அதி உயரத்தில் இருந்தவாறே ஒருசில குண்டுகளை வீசிவிட்டு திரும்பிவிட்டன. இக் குண்டு வீச்சு அனேகமாக நகர்ப்பகுதியிலேயே இடம்பெற்றது. பஸ் நிலையத்தில் வீழ்ந்த ஒரு குண்டு பெரும் குழி ஒன்றை ஏற்படுத்தியது.

## இராணுவம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரி. 81-2, மகசின்- 5ரவை, 150, ரி. 81 எறிகுண்டு-1, ஹோல்ஸர் - 2, சப்பாத்து 6 சோடி, தலைக்கவசம்-5 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டவையாகும். (மா)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.